REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 25உ செவ்வாய் (8—1—57) ★ ★ வெளியீடு: மார்கழி 26உ புதன் (9—1—57) [இதழ் 182

ஐ. நா. சபைக்கு பிரான்சு தரும் மதிப்பு!

★

பாரிஸ், சன. 7—

'அல்ஜீரியா விவகாரத்தை விவாதிக்க தனக்குத் தகுதி உண்டென ஐ. நா. கருதுமானால், அந்த விவாதத்தின்போது பிரெஞ்சுத் தூதுக் குழு வெளியேறும்' என்று, பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி பினே கூறியிருக்கிறாராம்!

'ஆனால், ஐ. நா.-விலிருந்து பிரான்சு வெளியேறிவிடும் என்பது இதன் அர்த்தமல்ல,' என்றும் அவர் கூறினாராம்!

நாட்டைக் காட்டிக்கொடுத்தவர்கள் ஓட்டுக் கேட்க வருகிறார்கள்

உருட்டல்-மிரட்டல் காட்டும் புதுமை கண்டு புன்னகை புரிகிறோம்!

மாற்றாரின் சத்தற்ற வாதங்களைச் சுட்டிக் காட்டுகிறார் ஈ. வெ. கி. சம்பத்

"நாம் காங்கிரசை எதிர்த்து 150 இடங்களில் கடுமையான போட்டியிடுவதென்று முடிவு செய்ததும் நம்மைப் பார்த்து பலர் எள்ளி நகையாடுகிறார்கள்; பலர் மிரட்டுகிறார்கள்—சிலர் உருட்டுகிறார்கள். 'இவர்கள் 150 இடங்களில் போட்டியிடுகிறார்களா? 5 இடத்திலாவது வெற்றி பெறுவார்களா?' என்று கொஞ்சம் தாராள மனது கொண்டவர்கள் கேட்கிறார்கள்; கொஞ்சம் குறுகிய மனம் படைத்தவர்கள், '3 இடம்தான் பிடிப்பார்கள்' என்று சொல்லிவிட்டு, 'இல்லை, இல்லை; ஒன்றுமே பிடிக்கமாட்டார்கள்' என்று தங்களைத் தாங்களே திருத்திக் கொள்கிறார்கள்! இப்படி உருட்டல்களையும் மிரட்டல்களையும் நம்மீது காட்டுகிறார்கள். நாமோ இவைகளையெல்லாம் சட்டை செய்யவில்லை; புன்னகை புரிகிறோம்! ஏனென்றால், நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, அதைப் பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது,"

—என்று, சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல நிதியளிப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'இவ்வளவு காலமாக உங்களையெல்லாம் காட்டிக் கொடுத்தவர்கள், இதோ, இருட்டை விட்டு வெளியே வருகிறார்கள்; அவர்களைக் கேளுங்கள்—என்று, நாங்கள் மக்களிடம் கூறுகிறோம் 'இங்கு அலுமினியம் தொழிற்சாலை ஏன் அமைக்கவில்லை? நெய்வேலித் திட்டம் ஆமை வேகத்தில் போவானேன்? நீலகிரியில் சினிமா பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலை இல்லாதது ஏன்? நீலகிரி மலைச் சாரலில் காகிதத் தொழிற்சாலை கட்ட வசதியிருந்தும் கட்டாமல் இருந்ததேன்?—இதுவரை நீங்கள் செய்ததென்ன?' என்று இருட்டை விட்டு உங்களிடம் வருகின்றவர்களிடம் கேளுங்கள்—என்று மக்களிடம் கூறுகிறோம் இதற்கெல்லாம் பதில் சொல்லத் தெரிந்தவர்களும் உண்டு—தெரியாதவர்களும் உண்டு!

"எங்களுடைய பணி தேர்தலுக்கு முந்தின நாளோடு முடிந்துவிடும்; அதற்குள், உணராதவர்கள் உள்ளத்தில் உணர்த்துவோம். அப்படி அவர்கள் உணர்ந்துகொண்டால், அந்த உணர்ச்சி இந்த சமுதாயத்தை வலுப்பெற்றதாக்கும்—அதனால் இந்த நாட்டின் தேவைகளை பூர்த்திசெய்ய முடியும். இவைகளை வைத்துக்கொண்டுதான் அவர்களையெல்லாம் சந்திக்கப்போகிறோமே தவிர, அவர்களுடைய உருட்டல்களுக்கோ மிரட்டல்களுக்கோ நாம் கவலைப்படவில்லை;

"இவர்கள் இதுவரை தி. மு. கழகத்தின் மீது கூறிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் சத்தற்றது தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன் காங்கிரசாரும் கம்யூனிஸ்டுகளும் என்ன சொன்னார்கள்? 'இவர்கள் தேர்தலில் நின்று பார்ப்பதுதானே? தேர்தலில் நிற்காத கட்சியும் ஒரு அரசியல் கட்சியா? இதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா?' என்று கேட்டனர். நாமும் தேர்தலுக்கு நிற்பதென்று முடிவு செய்தோம். என்ன ஆயிற்று? 'இவர்கள் தேர்தலிலா ஈடுபடுகிறார்கள்? அவர்கள் கட்சியின் சார்பில் நிறுத்திவைப்பதற்கு ஆள் கிடைப்பானா?' என்று காமராசர் வரை கூறினார்கள்.

"அதற்கடுத்தாற்போல் அண்ணா அவர்களைத் தலைவராகக் கொண்ட தேர்தல் ஆய்வுக் குழுவினர், வருகிற பொதுத் தேர்தலில் 150 பேர் போட்டியிடுவதெனச் சிபாரிசு செய்தது. உடனே காமராசர் திடுக்கிட்டார் — அதிர்ச்சியடைந்தார்—நடுக்கமெடுத்தது அவருக்கு! மக்களிடம் ஓடி ஓடிப் பேசுகிறார்—'150 பேர் போட்டியிடுகிறார்களாம்; எத்தனை பேர் வெற்றி பெற்றுவிடுவர்? 3, 4 பேர் வருவார்களா?' என்று கேலி பேசுகிறார்!

"தப்பித்தவறி 100 பேர் வெற்றி பெற்றுவிட்டால் அப்போதும் என்ன சொல்வார், காமராசர்? '100 பேர் வந்துவிட்டால் போதுமா? இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? ஒன்றும் செய்ய முடியாது,' என்றுதான் சொல்வார்.

"அப்படி 100 பேர் சட்டசபையில் சென்று இவர்களே பார்த்து பிரமிக்கும்படியாக ஏதாவது ஒன்றைச் செய்துவிட்டால் என்ன சொல்வார்? 'இது என்ன பிரமாதம்? இது முன்னமே எங்களுக்குத் தெரிந்திருந்தால் நாங்களும் இவர்களிடம் சேர்ந்திருப்போமே?' என்றுதான் சொல்வார்! இதில் ஏதாவது அரசியல் விவேகம் இருக்குமா என்பதை நீங்கள் சிந்தித்துப்பாருங்கள்.

"காமராசர் நம்மை வெறுக்கிறார். அந்த வெறுப்பின் காரணமாகச் சில வாசகங்களைப் பொது மக்களிடம் கூறுகிறார்; ஆனால் அந்த வார்த்தைகளில் சத்தில்லாமல் போய்விடுகிறது.

'நம்மீது குற்றங் குறைகூறும் அனைவரும் என்ன — அனைத்தையும் துறந்துவிட்டவர்களா? இல்லையே! அவர்கள் அனைவரையும் சற்று உற்று நோக்கிப் பார்த்தால், அவர்களெல்லாம் ஆண்டிக்கோலத்திலிருந்து அரச பீடம் வந்தவர்களாகத்தான் காணப்படுகிறார்கள்.

"நமக்கிருக்கிற வாய்ப்புகள் அவர்களுக்கு ஆத்திரத்தையும் வருத்தத்தையும் ஊட்டுகின்றன; அந்த ஆத்திரத்தில் நாட்டு மக்களிடம் கேவலமான மொழியில்—கீழ்த்தரமான முறையில் பேசுகிறார்கள். இதையெல்லாம் பற்றி நாம் கவலைப்படவில்லை. ஏன்? இவைகளைக் குறித்து நாம் அஞ்சினதில்லை; இவைகள் எதுவுமே நம்மை அழித்துவிட முடியாது என்ற தைரியம் நமக்கு இருக்கிறது."

[பேச்சு முடியவில்லை; நாளையும் வெளிவரும்]

6,055 விசைத்தறிகள்!

புதுடில்லி, சன 7—

பம்பாய், கேரளம் இராசஸ்தான், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய ஐந்து மாநிலங்களில் 6,055 விசைத்தறிகளைப் பொருத்துவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

மற்ற மாநிலங்களின் திட்டங்கள் ஆராயப்பட்டு வருகிறது.

'காங்கிரஸ் சர்வாதிகாரத்தை நோக்கி விரைகிறது'

கேரள பி. சோ. மாநாட்டு கருத்து

திருச்சூர், சன. 7—

"காங்கிரஸ் சர்வாதிகாரத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது; எனவே, காங்கிரசுக்கு எதிராகப் பலமானதோர் எதிர்க்கட்சி உருவாக வேண்டும்; எங்கெல்லாம் முடிகிறதோ, அங்கெல்லாம், காங்கிரசை ஆட்சிப் பீடத்திலிருந்து வெளியேற்ற வேண்டும்,"

என்று, இங்கு நடைபெற்ற முடிவுற்றுள்ள கேரள பிரதேச பி. சோ. கட்சி மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலில்

'வரப்போகும் தேர்தலில் எதிர்க் கட்சிகள், காங்கிரசை மூன்று முனை அல்லது பலமுனைகளில் எதிர்ப்பதைத் தவிர்த்து, ஒரே முனையில் காங்கிரசை எதிர்க்க முயற்சிக்க வேண்டும்' என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள்

'கம்யூனிஸ்டுகள், பி. சோ. விதிக்கிற நிபந்தனைகளுக்கு உட்பட மறுப்பார்களேயானால், நாம் தனித்து நின்றே தேர்தலில் ஈடுபடுவோம்' என்று, பட்டம் தாணு பிள்ளை கூறினார்.

மார்ச் 1-ந் தேதிமுதல் 12-ந் தேதிக்குள் தமிழகத்தில் தேர்தல்

ஒன்றேமுக்கால் கோடி பேர் வாக்காளராகியுள்ளனர்

சென்னை, சன. 7—

சென்னை மாநிலத்தில் பொதுத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுவிட்டன.

வரும் மார்ச்சு திங்கள் 1-ந் தேதி முதல் 12-ந் தேதிக்குள் தேர்தல்கள் நடைபெற்றுவிடும்.

205 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 41 மக்கள் சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வாக்காளர்

இப்போது சென்னை மாநிலத்தில் 1,75,49,035 வாக்காளர் உள்ளனர் என்றும், கடந்த பொதுத் தேர்தலின்போது இருந்ததைவிட இப்போது 54 சதவிகிதம் அதிக வாக்காளர்கள் இருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

'ஷேக்'குகள் புரட்சி!

லண்டன், சன. 5—

யேமனுக்கும், ஏடனுக்கும் இடையே உள்ள கடாபா பகுதியை ஆக்கிரமித்துக்கொள்ள முன்னேற்பாடாக பிரிட்டன் படைகளைக் கொண்டுவந்து குவித்துள்ளதாம்.

ஏடனில் உள்ள 4 ஷேக்குகள் பிரிட்டிஷ் அதிகாரிகளை எதிர்த்துப் புரட்சி செய்வதாகச் செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

நேருவின் நீலிக் கண்ணீர்!

"ஏராளமான மக்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் துன்பங்களையும் தொடர்ந்து அனுபவித்துவருகிறார்கள்; சுதந்திரத்தின் பலனை அவர்களும் அனுபவிக்க முடிந்தாலன்றி பெற்றுள்ள சுதந்திரத்திற்கு அர்த்தமே இல்லை. அவர்கள் இதுவரையில் அனுபவித்த கஷ்டங்கள் யாவும் மறைந்தால்தான் அவர்கள் சுதந்திர உணர்ச்சி பெற முடியும்,"

என்று, பண்டித நேரு, இந்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

குளித்தலைக்கு ரிசர்வ் போலீஸ் படையா?

திருச்சி, சன. 7—

குளித்தலை தாலுகாவில் 'கிசான்' தகராறு முற்றிவருவதையொட்டி, இரண்டு ரிசர்வ் போலீஸ் படைகள் குளித்தலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒற்றுமை உருவாக வழிகோலினரா?

"உள்நாட்டில் ஒற்றுமை இல்லையென்றால் நம்முடைய சமாதானக் கொள்கை பலனளிக்காது; நம்மை எவரும் இலட்சியம் செய்யமாட்டார்கள்" என்று பொதுக்கூட்டமொன்றில் பண்டிதர் பேசியுள்ளாராம்.

எகிப்தில் மீண்டும் நெருக்கடி ஏற்படுமா?

எகிப்துக்குச் சொந்தமான காசாவை இஸ்ரேல் திருப்பிக் கொடுத்தால்தான் சூயஸ் கால்வாயில் பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கப்பல்களை அனுமதிக்க முடியும் என்று நாசர் அறிவித்துள்ளார்.

எகிப்துக்கு நேரடியாகக் கட்டணம் செலுத்த மறுக்கும் எந்தக் கப்பலும் சூயஸ் கால்வாயில் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டில்லியிடம் ஆந்திர சர்க்கார் கோரிக்கை

தனிப்பட்டவர்களிடம் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்வதற்காக, ஆந்திர அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் ரூ. 50-இலட்சம் கடன் கேட்டுள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—1—'57 செவ்வாய்

இந்தூர் திருவிழாவின் 'இலட்சிய வீடு'

'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்' என்பது பழமொழி.

'பிறரை ஏமாற்றுவதற்கென்றே துணிந்து பொய் கூறும்போது, முன்னுக்குப் பின் முரண் இன்றி ஏமாற்ற நினைப்பவர் நம்பும்படியாகக் கூறு' என்பது, பழமொழியின் பொருள்.

ஆனால், காங்கிரசார் மக்களை ஏமாற்றுவதற்காகத் துணிந்து பொய் பல கூற முற்படும்போது இந்தப் பழமொழியை மறந்து விடுகிறார்கள்போல் தெரிகிறது.

தான் பிறருக்கு எடுத்துச் சொல்ல விரும்பும் ஒரு கருத்து பற்றி முதலில் தனக்குத் தெளிவும் நம்பிக்கையும் வேண்டும் ஒருவருக்கு. கருத்தொன்றை எடுத்துச் சொல்வதற்கே இந்தக் 'கட்டுப்பாடு' அவசியம் என்றால், தான் பிரகடனப் படுத்தி, பிறர் அதனைப் பின்பற்றவேண்டும் என்று எதிர்பார்க்கிற ஒரு இலட்சியம் பற்றி நிச்சயமாக ஒருவருக்கு, அந்த இலட்சியம் 'இதுதான்' என்ற வரையறுக்கப்பட்ட பொருளுணர்வும், அந்த இலட்சியமே சிறந்தது என்ற உறுதியான—இருதய சுத்தியான நம்பிக்கையும் தெளிவும் நிச்சயமாக இருந்தாக வேண்டும். இன்றேல், பிறருக்குத் தனது 'இலட்சியம்' என்று எடுத்துக் கூறவரும்போது தனக்கே குழப்பம்தான் ஏற்படும். தனக்கே, தனது இலட்சியம்—கொள்கை இதுதான் என்ற தெளிவு இல்லாதபோது, பிறரை எப்படி விளங்கவைப்பது—நம்பவைப்பது — பின்பற்ற வைப்பது?

இந்தூர் காங்கிரஸ் திருவிழாவில் இந்தக் கொள்கைக் குழப்பம் மலிவாகக் காணக் கிடக்கிறது.

ஆவடியில் 'சோஷலிச மாதிரி சமூக அமைப்பு' என்றவர்கள், பின் அமிர்தசரசில், 'சோஷலிஸ்டிக் சமூக அமைப்பு,' என்றார்கள். இப்போது இந்தூரில், 'சோஷலிசக் கூட்டுறவு காமன்வெல்த்' என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள், காங்கிரஸ் தலைவர்கள்!

கடற்கரை மணலில் 'வீடு' கட்ட நினைக்கும் மழலைகள், எப்படி எப்படியோ கட்டிக் கட்டி, கலைத்துக் கலைத்து பின் கோழிக் கூடுபோல ஒன்றைக் கட்டிக்கொண்டு, இதுதான் 'வீடு என்று கூறி விளையாடிடுவர்; கண்டிருக்கிறோம். சின்னஞ் சிறுவர்கள் மகிழ்ச்சி பொங்க விளையாடும் அந்த வீடு கட்டும் காட்சியாவது, பார்ப்போருக்கு இன்பமளிக்கும்; ஆனால், இந்த காங்கிரஸ் பெரியவர்கள், ஆண்டுதோறும் ஆவடியிலும் அமிர்தசரசிலும், இந்தூரிலுமாக அவர்கள் நடத்தும் திருவிழாக்களில் அழித்து—கலைத்து— கழித்து 'சோஷலிச இலட்சியம' என்ற 'வீடு' கட்டி விளையாடும் காட்சியைக் காணச் சகிக்கவில்லை.

கட்ட விரும்பும் வீடு இத்தகையது என்ற தெளிவான திட்டம் இல்லாமையால், காங்கிரசார் குழம்புகின்றனர். ஏதேதோ ஒன்றுக்கொன்று முறையான உறவும்தொடர்பும் இல்லாத, ஆனால் கவர்ச்சிகரமான வார்த்தைகள் சிலவற்றைக் கோர்த்து, இதுதான் காங்கிரசின் 'இலட்சியம்' என்று கூறுகிறார்கள், ஆண்டுக்கு ஒரு முறையாக — ஆளுக்கு ஒரு வகையாகக் காங்கிரஸ் தலைவர்கள்!

ஆனால், ஆபாசமான அந்த வார்த்தைகளின் சேர்க்கையில் இடைவிடாது இடம் பெற்று வருவது, 'சோஷலிசம்' என்ற புனிதமான வார்த்தைதான்!

சோஷலிசம் என்ற அந்தச் சொல், இன்று உலகில் வாழும் எல்லா மக்களையுமே கவர்ந்து இழுக்கக்கூடியதாகவும், புதியதொரு வாழ்வையும், அதை ஒட்டிய நாகரீகத்தையும் உருவாக்க வல்லதாயும் அமைந்திருப்பதால், பொதுவாக எல்லா அரசியல்வாதிகளுமே, 'தங்களது இலட்சியம் சோஷலிசம்தான்' என்று பிரகடனப் படுத்திவிடுகிறார்கள். சோஷலிசம் என்ற சொல்லுக்கு நியாயமான போரறிவாளர்கள் கற்றுத்தந்திருக்கிற பொருளுக்கு நேர்முரணான பொருளை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டுவரும் ஒரு சமூக அமைப்பைக்கூட சோஷலிச சமூகம்தான் என்று கூறிடும் துணிவு சில அநியாயக்காரர்களுக்குத் தோன்றிடுவதையும் நாம் காண்கிறோம்.

'சோஷலிச'த்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட இலட்சணங்களை ஏற்க மறுக்கிற பண்டித நேருவும், அவரை அடுத்து நிற்கும் காங்கிரசின் உச்சாணித் தலைவர்களும், தாங்கள் ஏதோ புதுமாதிரியான சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கப் போவதாகக் கதைக்கிறார்கள். 'சோஷலிசம்' பற்றி தெளிந்த ஞானம் படைத்தவர்தான் என்றாலும், அந்த இலட்சியம் தனக்கும தனது வடநாட்டுச் சகாக்களுக்கும் விருப்பமானவகையில், தான் சமைத்து வரும் ஒரு முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பிற்கு உடன்பாடானது அல்ல என்பதால், சோஷலிசம என்ற சொல்லை மட்டும் கூட்டுச் சேர்த்து, அதன் மூலம் நாட்டு மக்களைக் கவர்ந்துவிடலாம என்ற நப்பாசையால்—இச்சை யடக்கமின்மையால் தெளிவில்லாத ஒரு சொற்றொடரைப் பிரசவித்திருக்கிறார் பண்டிதர் தன் சகாக்களின் ஒத்தாசையுடன்!

'சோஷலிசக் கூட்டுறவு காமன்வெல்த்' என்ற இந்தூர் திருவிழாவில் கட்டப்பட்டுள்ள 'இலட்சியம்' எனும் வீடு, பதனழிந்த —நிர்ஜீவனமான—உயிரிழந்த—களையிழந்த ஒன்றுதான் தெரிகிறதே.

இந்தூரில் காங்கிரஸ் திருவிழா!

பிரதிநிதிகளிடையே உற்சாகமே இல்லையாம்

இந்தூர், சன. 6—

இங்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு சோபை இழந்து காணப்பட்டதாம்!

விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் எட்டு மணி நேரம் நடைபெற்றது என்றாலும், பிரதிநிதிகளோ பார்வையாளர்களோ அந்த 'வைபவம்' பற்றி எந்தவித உற்சாகமும் காட்டவில்லை என்பது பத்திரிகையாளருக்குத் தெளிவாகத் தெரிந்ததாம்!

தாய்மார்கள் பிள்ளைகளுக்குப் பாலூட்டிய வண்ணம், பந்தலைச் சுற்றி நின்ற கூட்டத்தை வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தனராம்!

பிரதிநிதிகளோ, பந்தலுக்கு வெளியே நின்று, வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டதுடன், தேர்தல் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர் என்றும், விஷயாலோசனைக் கமிட்டி விவாதத்தில் அவர்கள் கலந்துகொள்ளாதது மட்டுமின்றி, அந்த விவாதங்கள் பற்றி அக்கறை காட்டியதாகக்கூடத் தெரியவில்லை என்றும் பத்திரிகையாளர் கூறுகின்றனர்.

என்ன பேசுகிறார்கள்

என்ன பேசுகிறார்கள் என்பதை, கேட்க விரும்பும் சிலர்கூடக் கேட்க முடியாதவாறு பந்தலுக்குள் உட்கார்ந்திருந்த பிரதிநிதிகள், ருசிகரமான சொந்த விவகாரங்களைப் பேசிக்கொண்டிருந்தனராம்!

ஒலி பெருக்கி

மேலும் ஒலி பெருக்கி வேறு சரியாக வேலை செய்யவில்லையாம்!

பெரியவர்கள்

டாக்டர் பி. சி. ராய், மொரார்ஜி தேசாய் போன்ற பெருந் தலைவர்கள் பேசும்போதுகூட அமைதி இருக்கவில்லையாம்! அவர்களுடைய பேச்சை எவரும் காது கொடுத்துக் கேட்கவில்லையாம்!

எல்லாம் தெரிந்தவர்கள்!

வெளிவிவகாரக் கொள்கை பற்றிய தீர்மானம் கொண்டுவரப் பட்டபோது, வெளிவிவகாரங்கள் எல்லாவற்றையும் தெரிந்தவர்கள் போலப் பிரதிநிதிகள், பந்தலுக்கு வெளியே சென்று, பின்புறமாக உள்ள 'காண்டீனி'ல் தேநீர் சுவைத்துக்கொண்டிருந்தனராம்!

தலையாய காட்சி!

கூடியிருந்தோரில் பலர், பண்டித நேரு என்ற தலையாய காட்சி உருவத்தையே எங்கு சென்றாலும் விடாமல் துரத்திச் சென்றனராம்!

4-ந் தேதியன்று நேரு பண்டிதர் பந்தலைவிட்டுச் சற்று வெளியே வந்தபோது, பந்தலுக்குள்ளிருந்த பாதிக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், சேவாதளத் தொண்டர்களும் நேருவின் பின்னாலேயே சென்றுவிட்டனராம்!

'இந்தூர் மாநாடு, உப்புச்சப்பற்ற காங்கிரஸ் கட்சி மாநாடுகளில் ஒன்றாகவே இருந்தது' என்று அங்குள்ள பத்திரிகை நிருபர் ஒருவர் கூறியிருக்கிறார்!

மாவட்ட நீதிபதிகளின் அதிகாரம் உயருகிறது

சென்னை, சன. 8—

இதுவரை ரூ. 5000-க்கு உட்பட்ட அப்பீல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற மாவட்ட நீதிபதிகள், இனி ரூ. 10 000 வரை சம்பந்தப்பட்ட அப்பீல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கி ஒரு புதிய உத்தரவு சர்க்காரால் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அடுத்த ஏப்ரல் முதல் இவ்வுத்தரவு அமுலுக்கு வரும்.

மக்கள் வாழ்க்கையில் கலந்திருக்க வேண்டுமாம்!

' சோஷலிசம் நமக்குத் தேவையே; ஆனால், வேறு ஒரு நாட்டைப் பார்த்து 'காப்பி' அடிப்பதாக அந்த சோஷலிசம் இருக்கக் கூடாது; மக்களிடமிருந்து உளப்பூர்வமாக அது வரவேண்டும்; மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருப்பதாக அமையவேண்டும்" என்று பண்டித நேரு கூறியுள்ளார்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

மேபான் எனப்படும் ஒரே ஒரு பகுதி மட்டும் மத்திய சர்க்காருக்கு விசுவாசமுள்ள இராணுவ அதிகாரிகளின் கையில் இருந்து வருகிறதென்றும் மற்றும் சில செய்தி நிருபர்கள் அறிவித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, விழிப்புற்று வரும் மக்களை ஏமாற்றுவதற்கான கவர்ச்சியுடையதாகத் தெரியவில்லை.

பேராசிரியர் கார்வே கூறியதுபோல, பண்டிதர்கள் 'சோஷலிசம்தான் காங்கிரசின் கொள்கை — இலட்சியம்' என்று மக்கள் நமபவேண்டும் என்பதற்காக, பரஸ்பர விரோதமான சொற்களை கிரமமற்ற முறையில் அடுக்கிக் காட்டுவதின் மூலம், அவர்கள் குழம்பிக் கிடக்கிறார்கள்—சஞ்சலிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

நேரு கூட்டத்தின் டம்பம்-பாசாங்கு, மக்களை ஏமாற்றிவிடாது என்பது மட்டும திண்ணம்.

காங்கிரஸ் பெரியவர்களின் இந்த விளையாட்டு, 'சின்னச் சின்ன வீடு கட்டி - சிங்கார வீடு கட்டி விளையாடும் சின்னஞ் சிறுர்களின் விளையாட்டளவுகூடப் பலனோ, மகிழ்ச்சியோ மக்களுக்குத் தரப் போவதில்லை!

சமதர்மத்தின் அடிப்படைக் கருத்து

'2.000 ஆண்டுகட்கு முன்னரே திருவள்ளுவர் வலியுறுத்தினர்'

புதுக்கோட்டை, சன. 5—

"இன்று, ஆளும் கட்சியினராக வீற்றிருப்போர், 'சமதாமத்'தைப் பற்றி மிகைபடப் பேசிப் பெருமையடித்துக் கொள்கின்றனர். ஆனால், திருவள்ளுவப் பெருந்தகை, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முனனரே, சமதர்மத்தின் அடிப்படைக் கருத்தை 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தமது குறளடியினுல் எடுத்துக்காட்டி வலியுறுத்தியிருக்கிறார்! அந்தச் 'சமதர்ம'த்தை வலியுறுத்தி நூல் செய்தவர் திருவள்ளுவராகும். அத்தகு 'சமதர்மம்' நாட்டில் தழைக்கவேண்டுமானல் திருக்குறட் கருத்துக்கள், மக்களின் உள்ளத்தில் இடம் பெற்றாக வேண்டும்,"

என்று, புதுக்கோட்டை பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியா திரு அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், புதுக்கோட்டை திருக்குறட் கழகச் சார்பில் நடந்த மாதம் 23-ந்தேதி நடைபெற்ற இலக்கியக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

'என்றும் வாழும் எழுத்து' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தின அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், 'காலம், சாதி, சமயம் ஆகிய எல்லாவற்றையும் கடந்து, எவ்வகைப்பட்ட மனிதரும் ஏற்கும் வண்ணம் நன்னெறி காட்டும் வழிகாட்டியாக என்றென்றும் நிலைத்து நின்று வாழும் எழுத்து திருக்குறளாகும்; இருபது நூற்றாண்டுகள் கழித்தும் உலகில் வாழ்க்கைக்குத் துணையாக நிற்பதும், போலிக் கற்பனைகள் ஏதும் இல்லாமல் உலக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதும் திருக்குறள் ஒன்றுதான்,' என்ற குறிப்பிட்டார். (ந. நி.)

மக்களிடை நிலவும் அதிருப்தி மேலும் அதிகரிக்குமென பண்டிதரின் அச்சம்

'வெறும் காகிதத்தில் எழுதுவதால் மட்டும் ஏதும் செய்துவிட இயலாது' என்கிறார்

இலட்சுமிகர், சன. 6—

நாடு முழுமையிலும் உடனடியாக மதுவிலக்கைப் பரிபூரணமாக அமுல் செய்யவேண்டுமெனக் கோரும் ஒரு கருத்து குறித்து நேரு பேசுகையில் 'இப்போது உடனடியாக அவ்வாறு செய்ய இயலாது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது சம்பந்தமான ஒரு பிரிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மேற்படி திருத்தம் கொண்டுவரப் பட்டதாம். அது குறித்துப் பேசுகையிலேயே நேரு பண்டிதர் மேற்கண்டவாறு கூறியதுடன், 'இப்படிப்பட்டவைகளையெல்லாம் வெறும் காகிதத்தில் எழுதிவிடுவதால மட்டும் ஒன்றும் செய்துவிட இயலாது; இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாநிலத்திற்கு மாநிலம் நிலைமைகள் வித்தியாசப் பட்டுக்கொண்டிருக்கின்றன; எனவே, இந்தத் திட்டம் சிறுகச் சிறுகத்தான அமுல் செய்யப்பட முடியும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'சிற்சில காட்டுப்பகுதிகளில் இந்த மதுவிலக்கை உடனடியாக அமுல் செய்யமுடியாது; நானும் அதை விரும்பவில்லை. இவைகளெல்லாம் கட்டாயத்தினால் செய்து முடிக்கக்கூடியவை அல்ல ஏற்கனவே சிற்சில இடங்களில் இதனால் கொஞ்சம் அதிருப்தியான நிலை இருக்கும்போது, மீண்டும் உடனடியாக—எதிர்பாராவிதமாக அதை அமுல் நடத்துவதாக இருந்தால், அந்த மக்களிடம் நிலவும் அதிருப்தி நிலை மேலும் அதிகப்பட்டுவிடும் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

சுமத்திரா எழுச்சிக்குக் காரணம் என்ன?

'அன்னியர் தலையீடு' என்கிறது ஜகார்தா சர்க்கார்

ஜகார்தா, ஜன. 6—

இந்தோனேஷியாவின் உள்நாட்டு விவகாரத்தில் 'சில' அயல்நாடுகள் தலையிடுவதாக இந்தோனேஷிய சர்க்கார் புகார் செய்திருக்கிறது எனத் தெரிகிறது.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் சில நிகழ்ச்சிகளை, சில அயல்நாடுகள் தங்கள் பத்திரிகைகள், வானொலிகள் மூலம் தவறான முறையில் துஷ்பிரச்சாரம் செய்துவருகின்றன என்று இந்தோனேஷியா சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தோனேஷிய மத்திய சர்க்காருக்கும், வடக்கு-மத்திய சுமத்திராவிற்குமிடையே சுமூகமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் அந்த சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இந்தோனேஷிய சர்க்கார் இவ்வாறு அறிவிக்கும் அதே நேரத்தில், மத்திய சுமத்திராவில் உள்ள நிலை, இதுவரையிலும் எவ்வித மாறுதலும் இல்லாமல் முன்னைப்போலவே இருந்து வருகிறதென்றும், வடக்கு சுமத்திராவில்

(8-ம் கலம் பார்க்க)

சென்னை - வண்ணையில் மாபெரும் பொதுக்கூட்டம்

ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனார், கே. கோவிந்தசாமி கலந்துகொண்டனர்

சென்னை, சன. 7—

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில், சென்னை-வண்ணை இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் சார்பில் தி.மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் பெருமாள் முன்மொழிய, தோழர் இராமதாசு வழிமொழிய தோழர் டி. கே. சாமி தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப் பின், தோழர் பெருமாள் அவர்கள், தி மு. கழகத்தவரை மாற்றுக் கட்சியினர் துரோகிகள் என்று அழைப்பதைச் சுட்டிக்காட்டி, வடநாட்டவருக்கு இந்நாட்டு மக்களைக் காட்டிக் கொடுப்பவர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும்தான் துரோகிகள் என்று எடுத்துரைத்து, தி மு கழகத்தின் அடிப்படை இலட்சியங்களைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் அவ்வாறு கழகத்தைத் தூற்றுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, கூட்டத் தலைவர் ஆண்டறிக்கை வாசித்தார்.

பின்னர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

அவருக்கு 4-வது வட்டத் தி.மு. கழகத் தோழர்களால் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

தோழர் கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினதில் இளைஞர்களுக்குப் பெரும் பங்கு உண்டென்பதைச் சுட்டிக்காட்டியும், பதவி ஆசையின் காரணமாகச் சட்டசபையைக் கைப்பற்றி மந்திரி சபை அமைத்து ஆட்சி நடத்த வேண்டுமென்ற பதவிப் பித்தர்களல்ல தி. மு. கழகத்தவர் என்பதனை விளக்கியும், திராவிட முன்னேற்றக் கழகத்தவரும் மற்றவர்களைப் போலவே அரசியல் அறிவும், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் அக்கரையும் கொண்டவர்கள்; எனவே, அவர்களை தேர்தலில் நிற்பதற்கு இலாயக்கற்றவர்கள் எனக் கூறமுடியாது என்று குறிப்பிட்டும், இந்த நாட்டின் நலனுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் பாடுபடும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்றும் எடுத்துரைத்தார். மேலும் தேர்தல் நாட்களில் மாற்றுக் கட்சியினர் நம்மீது தப்புப் பிரச்சாரம் செய்து வருவது குறித்துத் தோழர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்துத் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசுகையில் 'இந்த நாட்டை ஆளும் கட்சியினர், தி மு. கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பொறாமையும், வயிற்றெரிச்சலும் கொண்டிருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டுவிட்டு, மேலும், 'மற்றக் கட்சிகளெல்லாம் தேர்தலுக்கு நின்றால், ஓட்டுப் பெற மக்களுக்குப் பணம் கொடுப்பார்கள்; ஆனால் நாம் பணமும் கேட்கிறோம்—ஓட்டும் கேட்கிறோம்; 20, 30 ஆண்டுக்கு அதிகமாக இந்த நாட்டின் சமுதாய இழிவைத் துடைக்கக் கல்லடியும் சொல்லடியும் பட்டுக்கொண்டோம் — இடுக்கண்களைத் தாங்கிவந்தோம்; சமுதாய மூடத்தனம், அடிமைத்தனம், சாதி வேற்றுமை இவைகளெல்லாம் நீக்கப் பாடுபட்டோம்; அதே நேரத்தில் அரசியல் பித்தலாட்டங்களை எடுத்துக் கூறினோம்; அதற்காகவும் நாங்கள் அனுபவித்த கொடுமைகள், இன்னல்கள் அதிகம்; எங்களை அழித்து ஒழிக்கச் சதிசெய்தனர்; இப்படிப்பட்டவர்களுக்கா எங்கள் ஓட்டு என்று காங்கிரசாரிடம் மக்கள் கூற வேண்டும்' என்று கேட்டுக் கொண்டு, வருகிற பொதுத் தேர்தலில் பொதுமக்கள் மிக எச்சரிக்கையுடன் இருந்து கழக அபேட்சகர்களுக்கே தங்கள் ஓட்டுக்களைப் போடுமாறும், அவ்வாறு மக்கள் ஆதரவுடன் தி மு. கழகத்தவர் சட்ட சபை சென்றால் மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகள் அனைத்தையும் கடமை உணர்ச்சியுடன் ஆற்றுவோம் என்றும் உறுதி கூறிக்கொண்டார்.

அவர் தமது பேச்சின் முடிவில் 'எங்கள் ஓட்டு' என்று கூறக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பொது மக்களும், 'உதயசூரியனுக்கே—தி. மு. கழகத்திற்கே,' என்று மிகுந்த ஆர்வத்துடன் முழக்கினது உண்மையிலேயே மிக எழுச்சியூட்டுவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்திருந்தது.

பின்னர், கூட்டத் தலைவர் அவர்களால், மேற்படி மன்றச் சார்பில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 101 தரப்பட்டது.

இறுதியாகத் தோழர் ஈ. வெ கி சம்பத் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தோழர் சம்பத் அவர்கட்கு 4-வது வட்டம் தி. மு. கழகம், கே வி. கே. சாமி படிப்பகம் ஆகியவை சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. (ந. தி.)

செயற்கைச் சந்திரன்

இந்திய வானில் தோன்றுமாம்!

8 நிமிடம் முதல் 12 நிமிடம் வரையில், மாலை நேரத்தின் மங்கிய ஒளியில், மேற்கில் உதித்துக் கிழக்கில் மறையும் செயற்கைச் சந்திரனை இவ்வாண்டு இறுதிக்குள் ஒரு குறிப்பிட்ட தினத்தில் இந்திய மக்கள் காணமுடியுமாம்!

பூமியிலிருந்து 200 அல்லது 300 மைல் உயரத்தில் இந்த செயற்கைச் சந்திரன் பூமியை 16 முறை சுற்றிவரக் கூடுமாம்.

இந்த ஆண்டில் இதுபோன்ற 10 செயற்கைச் சந்திரன்களை விண்ணில் மிதக்கவிட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தையும், சூரியன் இயங்கும் விதத்தையும் ஆராய்வதற்கு உதவும் இந்த செயற்கைச் சந்திரனை அமெரிக்கா மிதக்கவிடவிருக்கிறது; இந்த ஆராய்ச்சியில் உதவுவதற்கு இந்தியாவில் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைமையில் குழுஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

உத்திரப்பிரதேச வான ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு 'காமிரா' இந்தச் சந்திரனின் போக்கைப் படமெடுக்கக் கூடுமெனத் தெரியவருகிறது

உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் இந்தச் செயற்கைச் சந்திரனின் போக்கைக் கவனிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

சென்னை -- பெரம்பூரில்

மிதியணி உற்பத்தி நிலையம்

விரிவுபடுத்துவதற்கு திட்டம்

ரூ 2,37,740 முதலீட்டுச் செலவில் சென்னை—பெரம்பூரிலுள்ள மிதியணிகள் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது; இதற்கு ஆண்டுதோறும் ரூ 52,563 செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் மூன்றாண்டு காலத்திற்கு, தேர்ச்சிபெற்ற 10 பேர்களுக்கு உதவிச் சம்பளமளித்து, நவீன இயந்திர சாதன உதவியுடன் புதுவிதமான ரகங்களில் மிதியடிகள் தயாரிப்பதற்குப் பயிற்சியளிக்கப்படுமாம்.

மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு மானியமாக ரூ. 4,729ம், கடனாக ரூ. 1,84,867-ம் அளித்துள்ளதாம்.

மூன்று மூவண்டிகளில் கண்ணாடி அலமாரிகள் அமைத்து, அவைகளில் இங்கு தயாரிக்கப்படும் மிதியடிகளைக் காட்சிப் பொருட்களாக வைத்துப் பொது மக்களிடை விளம்பரப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இதற்கு ஆரம்பத்தில் ரூ. 15 000-மும், ஆண்டுதோறும் ரூ. 12 200-ம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பூரில் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

அண்ணா, என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், பொன்னம்பலனார் கலந்துகொண்டனர்

திருப்பூர், சன. 5—

திருப்பூர் நொய்யல் நதிக்கரையில் திருப்பூர் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்குத் தோழர் ஈ. வெ கி. சம்பத் தலைமை வகித்தார்

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் அ. பொன்னம்பலனார், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

பின்னர், திருப்பூர் நகரக் கிளையின் சார்பில் தோழர் மு முத்துரத்தினம் அவர்கள் ரூ. 501-12-4 கொண்ட பணமுடிப்பையும், பல்லடம் கிளையின் சார்பில் ரூ. 25-கொண்ட பணமுடிப்பையும, தி. மு கழகத் தேர்தல் நிதியாக அண்ணா அவர்களிடம் தந்தார்.

திருப்பூர் கிளைக் கழகச் சார்பில் அளிக்கப்பட்ட தொகையில் ரூ.-65 பனியன் பாக்டரி தொழிலாளர் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா அவர்கட்கு, திருப்பூர் நகர தி. மு கழகம் பனியன் பேக்டரி தொழிலாளர், தனலட்சுமி, எஸ். ஆர். சி. ஆலைத் தொழிலாளர், குன்னத்தூர், பல்லடம் வேலூர் (சேலம்)கிளைக் கழகங்கள், உளளூர் மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் மலர் மாலைகளும், திருப்பூர் கூட்டுறவு உற்பத்தியாளர் சிப்பந்திகள் சார்பில் தலைவர்களுக்குக் கைத்தறி வேட்டிகளும் அணிவிக்கப்பட்டன.

நிதியைப் பெற்றுக்கொண்ட அண்ணா அவர்கள், திருப்பூர் கிளையினர் காட்டும் ஆர்வத்தைப் பாராட்டியும், தேர்தலில் நமது நிலை குறித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினர். (ந. - தி.)

மண்டலசபைகள் துவக்க விழா

இம்மாத இறுதியில் நடைபெறுமாம்

புதுடில்லி, சன. 3—

மாநில புது அமைப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள ஐந்து மண்டலக் குழுக்களின் துவக்கக் கூட்டம், இத்திங்கள் மத்தியில் நடைபெறும் என்று தெரியவருகிறது.

எல்லைத் தகராறுகள், மாநிலங்களுக்கிடையில் கூட்டுறவு இவை குறித்து இந்த மண்டல சபைகள் கவனிக்கும் என்றும், டில்லி சர்க்கார், மண்டல சபைகளின் துவக்க விழாக் கூட்டத்திற்கான தேதி நிர்ணயம் குறித்து மாநில சர்க்கார்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கரிகால் சோழர் கட்டிய அணைக்கட்டுப் பகுதி

தஞ்சை, சன. 3—

பெண்ணாறு, காவிரி, கொள்ளிடம் ஆறுகள் கூடுமிடத்தில் கரிசோழமன்னரால் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுப் பகுதியை, நாடுகளைச் சுற்றி வருபவர்கள் காணும் முக்கியக் கேந்திரமாக மாற்றுவதற்கு இந்திய யாத்திரீகர் நிலையம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக ரூ. 50,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இயற்கைக் காட்சிகளுடன் அமைந்து, ஒரு தீவைப்போல் தோற்றமளிக்கும் இந்தப் பகுதியில் மின்சார வசதி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு ஒரு பூங்காவும், சிற்பக்கலை, ஓவியக் கலை நிறைந்த பொருள்களைக் கொண்ட ஒரு கண்காட்சியும் ஏற்படுத்தப்படுமாம்.

கட்சிடிக்கெட் கிடைக்காத அமைச்சர்

காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவாராம்

பீகார் மாநில அமைச்சரவையிலுள்ள ஒரு மந்திரி, தமது பதவியைத் துறந்துவிட்டதுடன், நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிடுவதெனவும் முடிவு செய்திருக்கிறாராம்!

மந்திரி சபையிலிருந்து இராஜிநாமாச் செய்துள்ள இராமச் சரித்திரா சிங் என்ற அந்த அமைச்சரை நிருபர் ஒருவர் சந்தித்து விவரம் கேட்டபோது, 'இப்போது நான் மௌனமாக இருப்பது நல்லது என்றே விரும்புகிறேன்' என்று குறிப்பிட்டாராம்!

கடந்த 1926-ம் ஆண்டிலிருந்தே அவர், தமது தொகுதியான டெக்ரா தொகுதியின் பிரதிநிதியாகச் சட்டசபையில் இருந்துவந்திருக்கிறார். ஆனால் வருகிற பொதுத் தேர்தலில் அவருக்குக் காங்கிரஸ் சார்பில் போட்டியிட மறுக்கப்பட்டுவிட்டதாம்!

இப்போது, கடந்த 30 ஆண்டுக் காலமாகத் தம்மீது நம்பிக்கை வைத்திருக்கும் தமது தொகுதி மக்கள் தம்மையே மீண்டும் இத தேர்தலில் போட்டியிடக் கேட்டுக் கொள்வதால் மீண்டும்—காங்கிரஸ் டிக்கெட் கொடுக்கப்படாவிட்டால் —காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவதென அவர் தீர்மானித்திருக்கிறாராம்!

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

விவசாய இலாகா கவனத்திற்கு!

ஐயா!

"எங்கள் ஊர் வழியாகச் செல்லும் அமராவதி ஆற்றில் 35 வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட வெள்ளத்தால், சின்னாறு என்ற கிளை நதி நஞ்சைத்தலையூர் அணைக்கட்டிற்கு கீழ் பிரிந்து பள்ளமாகி அதிலேயே வருஷம் முழுவதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது பூர்வீக நதியான அமராவதி மேற்படி அணைக்கட்டிற்குக்கீழ் மணல் அதிகமாக மூடி வறட்டாறாக மாறிவிட்டது. அதிலே வருஷம் முழுவதும் தண்ணீரே கிடையாது. மேற்படி சின்னாறு அமராவதியோடு வந்து சேரும் வரையில் எந்த நிலத்திற்கும் பாய்ச்சல் கிடையாது. ஆகையால் ஒருவருக்கும் பிரயோஜனம் இல்லை. வறட்டாற்றின் கரையிலே சுமார் 400 ஏக்கர் சாகுபடி நிலங்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு, சரியான விளைச்சல் இல்லை. மேலும் காற்றுக் காலங்களில் வறட்டாற்றிலுள்ள மணல் காற்றினால் அடிக்கப்பட்டு மேற்படி சாகுபடி நிலங்களில் விழுந்து, அதிலுள்ள புஞ்சைப் பயிரையும் பாதிக்கிறது

"வறட்டாற்றிலிருந்து ஊற்றுத் தோண்டி, ஊற்றுத் தண்ணீரை நிலத்திலுள்ள கிணற்றுக்குக் கொண்டுபோய் அதன்மூலம் சாகுபடி நடக்கிறது. இம்மாதிரி தண்ணீர் பாய்ச்சுவதால் நிலச் சொந்தக்காரர்களுக்கு மொத்தம் ரூ.-1,869—3—4 தண்டத் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது.

"உணவு உற்பத்திக்காக சர்க்கார் ஊக்கம் ஊட்டி வரும் இந்த நாளிலே இம்மாதிரி நிலங்கள் மணலால் பாழ்படுத்தப்படுவதற்கும், வறட்டாற்றிலிருந்து ஊற்றின் மூலம் விவசாயத்திற்காக தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு உத்திரவு கொடுக்காததாலும், ஏழை விவசாயிகளாகிய நாங்கள், மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். இந்த கஷ்டத்தைப் பலமுறை சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளிடத்திலும் முறையிட்டும், மனுச் செய்தும் இதுவரை யாதொரு பரிகாரமும் கிடைக்கவில்லை.

"ஆதலால் மேற்படி கஷ்டங்களைத் தடுக்க, அமராவதியின் தண்ணீர் நஞ்சைத்தலையூர் அணைக்கட்டிலிருந்து சின்னாற்றில் வழியவிடாமல் பூர்வீக நதியான (அமராவதி) வறட்டாற்றில் தண்ணீரை விடுவதற்குச் சர்க்கார் தகுந்த ஏற்பாடு செய்தால், நிலங்கள் தண்ணீரால் சாகுபடியாவதுடன், காற்றுக் காலங்களில் மணல் மூடி நிலங்களுக்கு ஏற்படும் தொந்தரவும் நிவர்த்தியாகிவிடும்"

—இவ்வறிக்கையை புஞ்சைத்தலையூர் பஞ்சாயத்துத் தலைவர் அச்சடித்து பொதுமக்களுக்கு அளித்துள்ளார். மேற்படி அறிக்கையின் உள்ளடக்கத்தை விண்ணப்பமாகப் பின்வரும் அமைச்சர்களிடம் தரப்பட்டுள்ளது.

23—3—51ல் வட்டமலை தாராபுரம் தாலுகா மாநாட்டில் அமைச்சர் பரமேஸ்வரனிடம்; தாராபுரம் விவசாய மாநாட்டில், முதலமைச்சர் காமராசரிடமும்; ஊதியூர் மாநாட்டில், விவசாய அமைச்சர் பக்தவத்சலமிடமும்; 8-5-56ல் தாராபுரத்தில் 1365 பசலி சமாபந்தியில் ஈரோடு சமாபந்தி அதிகாரியிடமும்; 4-7-56-ல் ஈரோடு ரெவினியூ டிவிஷனல் அதிகாரியிடமும் தரப்பட்டுள்ளது.

1280 - பசலி என்னும் வறட்டாற்றில் 35 ஆண்டுகளாகத் தண்ணீர் ஓடுவதில்லை. இப்பிரச்சினையை ரெவினியூ இலாகா சற்றும் கவனியாதிருக்கின்றது. நேரில் பலமுறை வேண்டியும்கூடப் பயனில்லை. இந்த ஆற்றோட்டத்தின் மாற்றத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 50 குடும்பங்கள் வேற்றூர்களுக்குக் குடியேறியும் இன்னும், பல குடும்பங்கள் வெளியேறக் கூடிய நிலையிலுமிருக்கின்றன.

கே. வைஜ்முகமது
ப. பெரியசாமி
நா. குமாரசாமி
புஞ்சைத்தலையூர்

★

தமிழ்ச் சங்கத்தவர் கவனிப்பரா?

ஐயா,

தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் இருக்கும் தமிழ்ச் சங்கத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் தனித் தமிழ் வித்துவான் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் இன்றளவும் இல்லாமை இரங்கத்தக்கதே. இதன் பொருட்டு மதுரை, இராமநாதபுரம், நெல்லை முதலிய மாவட்டங்களிலிருந்து தமிழார்வம் கொண்டுள்ள மாணவர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று கற்க வேண்டி இருப்பதால் நிறைந்த பொருட் செலவும் நீடித்த துன்பமும் நேர்கின்றன. இக்குறையை நீக்க, தமிழ்ச் சங்க நிருவாகிகள் ஆவன ஆற்றி அடுத்த ஆண்டிலேனும் சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் அங்கீகரிக்கப்பெற்ற வித்துவான் (ii-D) வகுப்புகள் நடத்தினால் மாசு நீங்கி மதுரை மாண்புறவதோடு, மாணவருலகமும் என்றென்றும் நன்றி செலுத்தும் கடமைக்குள்ளாகும் என்பது ஒருதலை.

எம். ஆர். கணபதி
ஆசிரியர், மதுரை

12,000 பீகார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்

காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்

காங்கிரஸ் சர்க்காருக்கு எச்சரிக்கை

பாட்ஞ, ஜன. 6—

பீகாரில் உள்ள சுமார் ஆயிரம் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 12,000 ஆசிரியர்கள் வரும் 1957 பிப்ரவரி 7-ந் தேதி முதல் காலவரையறையின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகச் சர்க்காரை எச்சரித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நாளையதினம், சர்க்காருக்கு வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்படும் என்றும், குறிப்பிட்ட தேதிக்குள் சர்க்கார் தங்களின் சம்பள உயர்வு முதலிய கோரிக்கைகளைக் கவனிக்காவிடில், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகும் என்றும் ஆசிரியர் சங்கத்தவர் அறிவித்திருக்கின்றனர்.

இந்தநிலைமைக்கு என்ன காரணம்?

இந்தியா முழுமையிலும் பள்ளி—கல்லூரிகளிலிருந்து வெளியேறிய மாணவர்கள், குமாஸ்தாக்கள், தச்சு வேலைக்காரர்கள், தெரு சுத்தம்செய்பவர்கள்எவ்வேலையும்தெரியாத தொழிலாளர்கள் உபரியாக உள்ளனர் என்றும், நல்ல பயிற்சி பெறாத ஆசிரியர்கள், மெக்கானிகுகள், ஓரளவு வேலை தெரிந்த பிட்டர்கள் ஆகியோர் தேவைகளை விட அதிகமாக உள்ளனர் என்றும் இந்தியாவிலுள்ள வேலை தேடித்தரும் நிலையங்கள் அறிவித்துள்ளன.

மக்கள் மன்றச் சிறப்புக் கூட்டம்

நடிப்பு-இசைப்புலவர் இராமசாமி தலைமையில் கண்ணதாசன், மனோகரன் சொற்பொழிவு

சென்னை, சன. 7—

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை குருசாமி(முதலியார்) பள்ளியில் மக்கள் மன்றச் சார்பில், நேற்று மாலை, தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்பு சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் வி. ஜி. கிருட்டிணன் சிறிது நேரம் உடற்பயிற்சி விளையாட்டுகள் செய்து காட்டினர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் சந்திரசேகரன் அவர்கள், மக்கள் மன்றம் ஆற்றிவருகின்ற பணிகளையும், நாட்டுக்கு நலம்பயக்கும் இயக்கமான தி மு கழகத்தை மேற்படி மன்றம் பின் தொடர்ந்து அந்த வட்டத்தில், வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர் எவர் நின்றாலும் அவருக்கு வெற்றி தேடித்தரும் விதத்தில் மக்கள் மன்றம் ஆதரவினைத் தரும் என்றும் கூறினார்.

அடுத்து, தோழர் கண்ணதாசன் அவர்கள், 'அ' முதல் 'ன்' வரை என்ற தலைப்பில், செந்தமிழ் பெற்றுள்ள சிறப்புகளையும், மொழியின் நயம், தன்மை, பண்புகளையும் தெளிவாக விளக்கியும், அம்மொழி வேற்று மொழிகளின் கலப்பால் எங்ஙனம் சீர்குலைந்து, செம்மை இழந்து, மரபு பங்கியுள்ளதெங்பதையும் எடுத்துக்காட்டியும், இதுவரை தமிழர்கள், எந்நேனும் பிறமொழிகளை அழித்துத் தம் மொழியை வலுக்கட்டாயமாகப் புகுத்த முயன்றதில்லை; ஆனால் இன்று வருவோரெல்லாம் அவர்களின் மொழிகளை நம்மீது திணிக்கிறார்கள் என்பதை விளக்கியும் சிறப்பானதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக தோழர் கி. மனோகரன் அவர்கள், 'சாந்தி, சமாதானம்' ஆகியவற்றிற்காகப் பாடுபடுவதாகக் காட்டிகொள்ளும் உலக அரசியல் தலைவர்களெல்லாம் அவரவர்கள் நாட்டிலே அராஜகத்தை விளைவித்துப் பிணக்காட்டை ஏற்படுத்துகிறார்கள் என்ற உண்மையை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கிக் கூறியும், பஞ்சசீலம் பேசும் பண்டிதர் நம் உரிமைக் குரலை ஒடுக்குவதையும் இந்நாட்டில் துப்பாக்கி வேட்டையாடுவதையும் எடுத்துச்சொல்லி, தேர்தலில் கழகத்தின் நிலைபற்றியும், நாட்டிலே வளர்ந்துள்ள ஆதரவு குறித்தும், பீதியடைந்துள்ள அமைச்சர்களின் போக்கு குறித்தும் சுவையுடன் விளக்கி தேர்தலில் பொதுமக்கள் மிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டும் உணர்ச்சி பொங்கக் கருத்துரை வழங்கினார்.

மக்கள் மன்றச் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ 400 நடிப்பிசைப்புலவரிடம் கொடுக்கப்பட்டது.

கூட்டத்தில் தாய்மார்கள் உட்பட ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். (ச. ம)

மணப்பாறை ஓட்டல் தொழிலாளர் கோரிக்கை

மணப்பாறை, சன 5—

ஓட்டல்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாராந்திர விடுமுறையைச் சரிவர அமுல் நடத்துமாறும், ஒவ்வொரு மாதமும் 5-ந் தேதிக்குள் தொழிலாளர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இங்கு கடந்த மாதம் 28-ந்தேதி நடைபெற்ற ஓட்டல் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில் திரு ஆர். வி பொன்னுசாமியைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. (ச. கி.)

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை S. I. A. A. திடலில்

10—1—57 மாலை 6-30மணிக்கு

அண்ணு நடிக்கும்

சந்திரமோகன்

நாடகம்

தனிப்பகுதி : ரூ. 10, 5, 3, 2, 1

முதல் இரண்டு வகுப்புகளும் இலவசமாக 6–1–57 முதல் ஒதுக்கப்படும்

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

திராவிட மாதர்கள் - நிதி அளிப்பு விழா

★

9—1—57 புதன் மாலை 6-மணிக்கு

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில்

மாபெரும் பொதுக்கூட்டம்

★

தலைவர் : தோழியர் வெ. குப்பம்மாள்

பேசுவோர் :

அண்ணு, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், தோழியர் இராசம்

★

குறிப்பு :—கூட்டத்தில் சென்னை பஸ் போக்குவரத்து ஊழியர்கள் சார்பிலும் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு.

தேர்வுக் குழு - சுற்றுப் பயணம்

★

நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் :

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். முத்து ஆகிய இருவரும் மேற்கண்ட மூன்று மாவட்டங்களிலும நிலைமையைக் கண்டறிந்து பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள் :—

10—1—57 :	இடம் :	திருநெல்வேலி
	தொகுதி :	நெல்லை, நாஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்
11—1—57 :	இடம் :	விருதுநகர்
	தொகுதி :	இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்
12—1—57 :	இடம் :	மதுரை
	தொகுதி :	மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 8-1-57 மாலை 6-30மணிக்கு

திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்

திரு. கே. ராமதாஸ், டிபுடி. மேயர் தலைமையில்

குமாரி ஈ. வி. சரோஜா

பரத நாட்டியம் & ஓரியண்டல் நடனங்கள்

★

9—1—57 புதன் மாலை 6-30 மணிக்கு

திரு. எம். கே. நாகேந்திரன், M C. தலைமையில்

திரு. பி. சூரியபாபு குழுவினர் அளிக்கும்

'தாரா சசாங்கம்' தெலுங்கு நாடகம்

தனிப்பகுதி : ரூ. 3, 2, 1, அணு 8. திறந்தவெளி இலவசம்

பொருட்காட்சி பகல் 2 மணி முதல் இரவு 9 மணிவரை.

பிரவேசக் கட்டணம் 0—5—0

10—1—57 வியாழன் :

அண்ணு நடிக்கும் 'சந்திரமோகன்'

எம் எஸ் மோகன்—காண்டிராக்டர்

சென்னை மகளிர் மன்றம் - கலை நிகழ்ச்சி

★

15—1—57 மாலை 5-மணிக்கு

செயின்ட் மேரிஸ் மண்டபத்தில்

அண்ணு அவர்கள் தலைமையில்

நடைபெறும்

★

எஸ்.எஸ். இராசேந்திரன், டி.வி. நாராயணசாமி

நடிக்கும்

'உதய சூரியன்' நாடகம்— மு. கருணநிதி எழுதியது

இராஜசுலோசன 'தேசிங்கு ராஜன்'

பங்கேற்கும் ('ரங்கோன் ராதா') நிகழ்ச்சிகள்

★

குசலகுமாரி நடன நிகழ்ச்சியும் நடைபெறும்

நுழைவு நன்கொடை : ரூ. 10, 5, 3, 2, 1.

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம் :—

மகளிர் மன்ற அலுவலகம், 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, சென்னை-1.

புவனேசுவரி–நடராசன், 'திராவிடன்' அலுவலகம், அம்மன் கோயில் தெரு, கொண்டித்தோப்பு.

சற்குண கபே, மணிகார் செவல்ட்ரி ரோடு வண்ணாரப்பேட்டை.

15—1—57 காலை முதல் செயின்ட் மேரிஸ் ஹாலில் டிக்கெட்டுகள் கிடைக்கும்.

சேதி தெரியுமா?

சுருக்கெழுத்தாளர்கள், வேகமாக டைப் அடிக்கக்கூடியவர்கள், ஆசிரியர்கள், ஓவர்சியர்கள், டிராப்ட்ஸ்மென்கள், கம்பவுண்டர்கள் ஆகியவர்கள் நாடு முழுவதிலும் 1956 நவம்பர் திங்களில், தேவையைவிட மிகக் குறைவாக இருந்ததாகப் பரிசீலனைகள் மூலம் தெரியவருகிறதாம்!

பற்றாக்குறை!

உடற்பயிற்சி ஆசிரியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரப் பார்வையாளர், மருத்துவச்சிகள், டர்னர்கள் ஆகியோர் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லையாம்!

பாய்லர் அட்டெண்டர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், 'சர்வே'யர்கள், மின்சாரச் சிப்பந்திகள் கிடைப்பது கஷ்டமாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறதாம்!

இந்தத் தகவலை இந்தியாவில் உள்ள வேலை தேடித் தரும் நிலையங்களின் அறிக்கை கூறுகிறது.

வடநாட்டிற்கு மட்டும் இந்தச் சலுகையா?

உத்திரப் பிரதேச சோஷலிஸ்டுக் கட்சிக்கு அந்த மாநிலத்தில் மட்டும் 'மரம்' சின்னத்தை ஒதுக்கத் தேர்தல் குழு இசைந்துள்ளதாம்.

இந்தச் சலுகையை மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று தேர்தல் குழுவை சோஷலிஸ்டுக் கட்சி கேட்டுக்கொண்டுள்ளதாம்.

தேர்வுக் குழு

சுற்றுப்பயணம்

★

வட ஆற்காடு மாவட்டம்

தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 11—1—57 வெள்ளி காலை 10-மணிக்கு வேலூர்—டவுன் ஹாலில் வட ஆற்காடு மாவட்டத்தின் நிலைமைகளைக் கண்டறிந்து பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்.

குறிப்பு :— வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு பொதுச்செயலாளர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.